பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 15 புதன்கிழமை (30-12-1992) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 34

14 JAN 1993

## புனாணையில் அதிரடித் தாக்கு! ஐந்துக்கு அதிக படையினர் பலி!!

யாழ்ப்பாணம், டிச. 30

மட்டக்களப்பு புனாணை இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து இராணுவ ரோந்து அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்துக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலின்போது ஏ. கே. எல் எம். ஜி. துப்பாக்கிகள், ரி - 56 ரகத் துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாஸா அறிவிப்பு

# ஜனாதிபதித் தேர்தல் 1994 டிசம்பரில்தான்!

### எதிரணிக்கு சந்தர்ப்பம் வழங்க கால அவகாசம் கொடுக்கிறாராம்

கொழும்பு, டிசம்பர் 30

"அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அதற்குரிய காலத்தில்தான்— அதாவது 1994 ஆம் ஆண்டு டிசம்பரில்தான் — நடத்தப்படும். அதற்கு முன்னர் எந்தக் காரணம் கொண்டும் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படமாட்டாது." — இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்திருக்கிறார்.

றம்புக்கணையில் ஆடை உற்பத்தித் தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு அறிவித்தார்.

"எந்தத் தேர்தலும் அதற்குரிய காலத்தில்தான் நடத்தப்படும்.

"எதிர்க்கட்சிகள் பிளவுபட்டு இருக்கும் இத்தருணத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் நான் அமோக வெற்றியை ஈட்டுவேன் என்று சிலர் கூறுகின்றனர் எதிர்க்கட்சிகள் பிளவுபட்டுள்ள இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேர்தலை நடத்தி வெற்றி பெற நான் விரும்பவில்லை,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிராகப் புதிய உத்திகள் புத்தாண்டில் படையினர் கையாள்வர்

கொழும்பு டிச 30

1993 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் புதிய உத்திகள் கையாளப்படும்.

இராணுவ உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இலங்கை வானொலியின் சர்வதேச சேவை இவ்வாறு அறிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்றும்—

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக் கைப்பற்ற படையினர் உரிய நடவடிக்கைகளை எடுப்பர் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## பரவலாக ஷெல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், டிச 30

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று மாலை வரை குடாநாட்டின் பல்வேறு இராணுவ முகாம்களில் இருந்து படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் வெற்றிலைக்கேணிப் பகுதியிலிருந்து கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. பல ஷெல்கள் பற்றைக் காணிகளில் விழுந்து வெடித்தன.

நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் பலாலி முகாம் நிலைகளிலிருந்து ஏழாலை, அளவெட்டி, மயிலங்காடு, குப்பிளான், தெல்லிப்பளை, வறுத்தலைவிளான் பகுதிகளை நோக்கி ஷெல் குண்டுகள் ஏவிவிடப்பட்டன. துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. இதனால் இப் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் மாதகல் மேற்கு, சில்லாலை, பண்டத்தரிப்பு கரையோரப் பாதையால் படையினரின் கனரக வாகனம் ஒன்று பேரிரைச்சலுடன் சென்றதைக் கேட்கக்கூடிய

[5 ஆம் பக்கம் பார்க்க]

### உதயன் நாட்காட்டி - 1993

1993 ஆம் ஆண்டுக்குரிய உதயன் நாட்காட்டி மூவர்ணங்களில் நாளைய உதயனோடு இலவச இணைப்பாக வெளிவருகிறது. உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

## மீனவர் மீது தாக்குதல்

வல்வெட்டித்துறை, டிச 30

நேற்றுக் காலை 6 மணியளவில் வல்வைக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பலிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. மீனவர்கள் சிறு காயங்களுடன் கடலில் பாய்ந்து நீந்திக் கரைசேர்ந்தனர்; மீனவரின் சில படகுகள் சேதமடைந்தன.

நேற்று நண்பகல் வரை வல்வைக் கடற்பகுதியில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையும் இடம்பெற்றது. (உ-1ع5)

## சிக்குண்ட 16 பேரை கூட்டிவர முயற்சி

இளவாலைப் பகுதிக்குச் சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் அங்கு படையினரிடம் சிக்கியுள்ள மக்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அவர்களில் 16 பேரை இங்கு அழைத்துவர முயற்சி எடுத்தனர்.

எனினும் கடல் கொந்தளிப்புக் காரணமாக அவர்களை நேற்றுக் கப்பலில் ஏற்றிவர முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மரத்தில் ஏறியவர் சூட்டுக்கு இலக்கானார்

திருநெல்வேலி, டிச. 30

மரத்தில் ஏறி தேங்காய் பிடுங்கிவிட்டு இறங்க முற்பட்டவர் மரத்தில் இருந்தபோது படையினரின் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை அளவெட்டியில் இடம்பெற்றது. மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகம் நீதிமன்றத்திற்கு அண்மையில் தங்கியிருக்கும் க. நடராஜா (வயது 50) என்பவரே காயமடைந்தவராவார். (உ-143)

## முச்சந்தி முரளி



உத்தியை மாத்தி சித்தி வராது. இதய சுத்தியோடை புத்தியை மாத்த வேணும் பாருங்கோ......!

## புனாணையில் புலிகள் கைப்பற்றியவை

யாழ்ப்பாணம், டிச. 30

புனாணையில் நேற்று நடந்த அதிரடித் தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் வருமாறு:

- ஏ. கே எல். எம். ஜி. – 01
- மகஸின் – 05
- லிங்குகள் – 48
- ரி 56 துப்பாக்கிகள் – 02
- மகஸின் – 07
- ரி 81 துப்பாக்கிகள் – 02
- மகஸின் – 08
- ஐ. எம். ரவைகள் - 1045
- ஜே. ஆர். கிரனேட் – 01
- ஏ. கே. ஹோல்ஸர் – 04
- கிட்பாக் – 05
- ராணுவப் பட்டிகள் – 02
- ராணுவ தொப்பிகள் – 02
- மழைக்கவசம் – 03
- ரி 81 ரகத் துப்பாக்கிக்குரிய கிரனேட் – 02

(உ-3)

## தமிழர்கள் விரட்டியடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 30

மட்டக்களப்பு மேற்குப் பகுதியில் மண்டூருக்கு அருகில் உள்ள முதலைக்கண்ணி மேடு கிராமத்தில் வசித்த தமிழர்களை அதிரடிப் படையினர் மிரட்டி பலவந்தமாக அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர்.

அங்கிருந்த மக்கள் தற்போது மண்டூர் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலையில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். (உ-3)

## மண்டூரில் 20 தமிழர் கைது!

யாழ்ப்பாணம், டிச 30

மண்டூர் கிராமத்தை அண்மையில் சுற்றி வளைத்த அதிரடிப்படையினர் அங்கிருந்து 20 தமிழர்களை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர். (உ-3)

## தங்கச் சுரங்கம் தொடர்கிறது

கொழும்பு, டிச, 30

வவுனியா மாவட்டம் — செட்டிகுளம் பகுதியில் 'தங்கச் சுரங்கம்' இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஹெலி நோட்டம்

யாழ்ப்பாணம், டிச. 30

நேற்றுக் காலை 6.30 மணிக்கு மாதகல் பகுதியிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள் ஓய்ந்ததை அடுத்து சுழிபுரம் பகுதியில் — ஹெலி ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

நேற்றுக் காலை 8 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் அளவெட்டி, மல்லாகம், தெல்லிப்பளை, ஏழாலைப் பகுதிகளை ஹெலி ஒன்று நோட்டமிட்டுச் சென்றது. (உ-13-28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் யாழ். பிரதேச செயலகங்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், டிச 30

மாவட்ட செயலகத்தின் வேலைகளை பிரதேச செயலகங்களுக்குப் பரவலாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு 15 உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

யாழ். மாவட்டம் — திரு. கே. சிவ ாதம், ஊர்காவற்றுறை — திரு. இ. குமாரசாமி சர்மா. வேலணை — திரு எஸ். தெட்சணாமூர்த்தி, யாழ்ப்பாணம் — திருமதி ஆர். ஸ்ரீ ஸ்கந்தராசா, நல்லூர் — திருமதி எஸ். சிவநாதன் கோப்பாய் — திரு. எஸ், குணரத்தினம், உடுவில் — திரு. கே. தர்மராஜா, சங்கானை .. திரு. எஸ் பரமேஸ்வரன், சாவகச்சேரி — திரு. வி. கனகரத்தினம், கரவெட்டி — திரு. கே. இராசரத்தினம், தெல்லிப்பளை — திரு கே. சத்தியசீலன், பருத்தித்துறை — திரு. எம். மகேந்திரன், மருதங்கேணி — திரு. எஸ். ஈஸ்வரபாதம், நெடுந்தீவு — திரு. இராசையா. சண்டிலிப்பாய் — திருமதி திரிபுரநாதன். (உ-க)

## உற்சவங்கள்

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். ஜனவரி ஏழாம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். (க-117)

★ ★ ★

சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (க-117)

# 425 பட்டதாரி ஆசிரியர்கள் இன்று வடக்கிற்கு நியமனம்

கொழும்பு, டிச. 30

வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 425 பட்டதாரிகள் ஆசிரியர்களாக இன்று நியமனம் பெறவிருக்கின்றனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மொத்தம் 800 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவிருப்பது தெரிந்ததே. (உ-எ-3)

## ஜி சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சை

# குடாநாட்டில் 12 மாணவர் 4 பாடங்களிலும் "ஏ" சித்தி

கடந்த ஆகஸ்டில் நடத்தப்பட்ட ஜி சி. ஈ. (உயர்தரப்) பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 4 பாடங்களிலும் அதிவிசேட சித்தி (''ஏ'') பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 12 என்றும்—

இவர்களில் யாழ். இந்துக் கல்லூரியில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 3 என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றைய 9 மாணவர்களும் எந்தப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் இன்னும் தெரிய வரவில்லை.

இப்பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் கொழும்பில் வெளியாகின என்பது தெரிந்ததே. (உ-எ)


## சாவகச்சேரி பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

16-12-92 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு மேலாக பின்வரும் இடங்களில் இறைச்சிக் கடைகள் அமைத்து வியாபாரம் செய்யும் உரிமைக்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 07-01-93 வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| மாட்டிறைச்சிக் கடை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|
| 01. பண்டிதர் குடியிருப்பு கடை இல. 01 (முன்பு விண்ணப்பம் செய்தவர்கள் திரும்ப விண்ணப்பிக்க வேண்டியதில்லை) | 2000. 00 |
| 02. பண்டிதர் குடியிருப்பு கடை இல 02 | 2000. 00 |
| **ஆட்டிறைச்சிக் கடை** | |
| 01. மிருசுவில் சந்தை | 2000. 00 |
| 02. நாவற்குழி | 2000. 00 |
| 03. வரணிச் சந்தை | 200). 00 |
| கைதடி சந்தைக் கடை | 25000. 00 |

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
29-12-92

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்
(சி/4066)


# இறக்கும் வேலைகள் இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிச. 30

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமண' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் கடற் கொந்தளிப்புக் காரணமாக நேற்று நண்பகலுடன் தடைப்பட்டதாகத் தெரிய வந்தது.

நிலைமை சீரடைந்தால் இன்று வேலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது (உ-3)

## புனாணையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புனாணை இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 10 மணிக்கு வாகனேரி இராணுவ முகாமுக்கு பதினைந்துக்கு மேற்பட்ட படையினர் ரோந்து சென்று கொண்டிருந்தபோது, புனாணை இராணுவ முகாமுக்கு அருகில் 150 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இந்த அதிரடித் தாக்குதலை நடத்தினர்

இத்தாக்குதல் சம்பவத்தின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினர் தவிர ஏனையோர் அருகில் உள்ள முகாமுக்கு தப்பி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-3)

# உதைபந்து போட்டிகளுக்கு புதிய நிர்வாக விதிமுறைகள்

யாழ்ப்பாணம், டிச.30

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் உதைபந்தாட்ட போட்டி ஆட்டங்களை புதிய நிர்வாக நடைமுறை, விதிமுறைகள் ஆகியவற்றுக்கு அமைவாகவே நடத்த வேண்டும் என்றும்—

யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபையின் அனுமதியின்றி போட்டி ஆட்டங்களை நடத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது.

மாவட்டத்தில் உள்ள சகல உதைபந்தாட்டக் கழகங்களையும் உதைபந்தாட்டச் சபையில் பதிவு செய்து கொள்ளும்படியும்—கேட்கப்பட்டுள்ளது.

முதற்கட்டப் பதிவுக்கான இறுதி நாள் எதிர்வரும் 10 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## யா / செங்குந்த இந்துக் கல்லூரி
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

### ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை-1993


மேற்படி பரீட்சை கல்லூரியில் 02-01-93 சனிக்கிழமை நடைபெறும்.

| | | |
|---|---|---|
| கணிதம் | மு. ப. | 8,30—9. 30 |
| தமிழ் | | 9. 45—10. 45 |
| ஆங்கிலம் | | 11. 00—12. 00 |

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று 01-01-93 க்கு முன் சமர்ப்பிக்கவும்.

( 3837) — அதிபர்


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 26 - 12 - 1954

உதிர்வு: 30 - 11 - 1992

அமரர்

## தாமோதரம்பிள்ளை தர்மசேகரம்

(A I B. SRI L NKA

வங்கிச் சேவையில் எமது காங்கேசன்துறைக் கிளையில் முதற் சேவையை ஆரம்பித்து, மக்கள் வங்கி ஊழியர்களின் இதயத்தில் நீங்காத இடத்தை பெற்று, கடந்த 30-11-92 இல் இறைவனடி சேர்ந்த உயர்திரு. தா. தர்மசேகரம் அவர்களின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

ஊழியர்கள்

மக்கள் வங்கி காங்கேசன்துறை,
ஊழியர் நலன்புரிக் கழகம்.

(23834)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## விவசாய பீடம்

விவசாய பீடத்தின் 1991/92 ஆம் கல்வியாண்டு 1993 - 01 - 04 அன்று ஆரம்பமாகும். புதிய மாணவர்களும் அன்று சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். விடுதி வசதிகள் விவசாய பீடம். கிளிநொச்சியில வழங்கப்படும்.

குறிப்பு: விவசாய பீட மாணவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி விவசாய பீடத்திற்கு செல்வதற்கு பயண ஒழுங்குகளில் இடையூறுகள் இருப்பின் இப்பல்கலைக்கழக பதிவாளருடன் 31 - 12 - 1992ற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

-பதிவாளர்.
(சி-4067)



கணித பாடத்தில்
திறமைச் சித்திக்கு உத்தரவாதம்

## ஆண்டு 9, 10, 11 கணிதம்

ஆசிரியர்- N. K. Kukanesan

உளவியலை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கப்படும். தனிப்பட்ட வகுப்புக்கள் தேவைப்படுவோர் 12-01-93 ற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

இல. 08, உதயன் சேவை நிலையம்.
82. கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம். (5470)


# மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம்

31-12-1992 ஆந் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருந்த மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம், தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப் பட்டுள்ளது.

அடுத்தகூட்டம் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வி. செ. சுவாமிநாதன்.
திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்,

கா. மாணிக்கவாசகர்.
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.
28-12-92 (சி/4065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மங்களமுனசிங்காவின் அறிக்கையில்

# இந்தியா எதிர்நோக்கும் பிரச்சினைகள் புறக்கணிப்பு

## சுதந்திரக்கட்சி எம். பி. சொல்கிறார்

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்களமுனசிங்கா அண்மையில் சமர்ப்பித்த அறிக்கை—

இந்தியா தனது அரசமைப்பின் கீழ் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளைப் புறக்கணித்து விட்டது.

சுதந்திரக்கட்சி எம். பியான ரி. டபிள்யூ இராஜரத்தினம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாம் ஆரம்பத்தில் இருந்தே தெரிவு குழுவின் அமர்வுகளில் கலந்து கொள்வதை நிறுத்தி விட்டதாகத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது;

மங்கள முனசிங்காவின் அறிக்கை குறித்த எனது கருத்துக்களை பொருத்தமான நேரத்தில் வெளியிடுவேன். எனது கருத்துக்கள் வித்தியாசமானவை பலனளிக்கக்கூடிய தீர்வு காணப்படுமா என்பது சந்தேகமே சரித்திரம் மீண்டும் திரும்பக் கூடாது என்றார் (த-எ)

# போசாக்கற்ற சிறுவருக்கு உதவ புனர்வாழ்வு நிலையம்

## ஆய்வுக் கூட்டத்தில் தீர்மானம்

வண்ணார்பண்ணை, டிச. 30

யாழ். மாவட்டத்தில் போசாக்கின்மையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்க—

அரசசார்பற்ற நிறுவனங்கள் தத் தமது பகுதியில் போசாக்கு புனர்வாழ்வு நிலையங்களை அமைத்து உதவி வழங்க வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போசாக்கு நிலைவரம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு;

★ எதிர்காலத்தில் பிறக்கப் போகும் குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்படக் கூடிய அபாயம் பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.

★ அண்மையில் தயாரிக்கப்பட்ட போசாக்கு நிலைவரம் தொடர்பான அறிக்கையை மேலதிகமான சில தகவல்களுடன் வெளிநாடுகளிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் கொழும்பிலுள்ள இணையத் தலைமையகத்துக்கும் அனுப்பிவைத்தல்.

★ யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் அவ்வப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியுடன் பல ஆய்வுகளை நடத்தி விஞ்ஞான ரீதியான அறிக்கை ஒன்றை தயாரித்தல். (த-162)

# கிராமங்களின் பெயர்களில் முன்னேற்றச் சங்கங்கள்

வலிமேற்கு, டிச. 30

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் தனி நபர்களின் பெயர்களில் இயங்கி வந்த கிராம முன்னேற்றச் சங்கங்களின் பெயர்கள் யாவும் தற்போது நீக்கப்பட்டு கிராமங்களின் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பணிப்பிற்கிணங்க புதிய யாப்பு விதிகளின்படி புனரமைக்கப்பட்டு வரும் கிராம முன்னேற்றச் சங்கங்களிற்கு சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் சூட்டப்பட்ட நேரு, காந்தி போன்றவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு தற்போது அந்த அந்தக் கிராமங்களின் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண சபை உட்துறை அமைச்சின் புதிய யாப்பு விதியில் தனி நபரின் பெயரை கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு சூட்டக் கூடாது என குறிப்பிட்டுள்ளது. (த-175)

# இணை அமைச்சர் இப்படி சொல்கிறார்

சென்னை, டிச. 30

அரசமைப்புச் சட்டத்துக்குட்பட்ட விதத்தில் தமிழ்நாடு அ. தி. மு. க அரசு செயலாற்றும்வரை, அந்த அரசை மத்திய அரசு பதவியில் இருந்து விலக்காது.

மத்திய இணை அமைச்சர் எம். அருணாசலம் கூடலூரில் கடந்த ஞாயிறு நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார். (த-எ)

# இடைக்கால பொதுத் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை

## நரசிம்மராவ் சொல்கிறார்

திருப்பதி, டிச 30

இந்தியாவில் இடைக்காலப் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

திருப்பதியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக்கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை லோகசபையில் தோற்கடிக்கப்பட்டமை அரசாங்கத்தின் இந்த முடிவை உறுதிப்படுத்துவதாகவும் அவர் சொன்னார்.

### வடமராட்சிப் பகுதி

# தாய்மாருக்குத் திரிபோசா 2 மாதங்களாக இல்லை

மந்திகை, டிச. 30

வடமராட்சிப் பகுதியில் உள்ள தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்குப் போசாக்கு உணவாக வழங்கப்பட்டு வந்த ''திரிபோசா'' கடந்த இரு மாதங்களாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள அரசினர் வைத்தியசாலைகள், பொதுஇடங்கள் ஆகியவற்றில் நடத்தப்பட்டுவரும் தாய்-சேய் கிளினிக்குகளின் போது கடந்த அக்டோபர் மாதம்வரை திரிபோசா வழங்கப்பட்டு வந்தது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்குப் போதியளவு திரிபோசா வந்து சேராததாலேயே இந்நிலை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-ரி)

# உலக சமய தினம்

எதிர்வரும் ஜனவரி 17 ஆம் திகதி உலக சமய தினம் அனுஷ்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

(த-எ)

# தெல்லிப்பளை வைத்தியசாலையில்

# கடந்த மாதத்தில் மட்டும் 14 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

கந்தரோடையில் தற்காலிகமாக இயங்கிவரும் தெல்லிப்பளை வைத்தியசாலையின் கிளினிக்கில் கடந்த மாதத்தில் 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

வைத்தியசாலையின் புள்ளி விவரங்களில் இருந்து இது தெரியவந்துள்ளது.

அண்மைக்கால ராணுவ நடவடிக்கைகளால் மேற்படி வைத்தியசாலை மானிப்பாயிலும் கந்தரோடையிலும் இயங்கி வருவது தெரிந்ததே. (த-68)

# மீள் பரிசீலனை

அரியாலை, டிச. 30

தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் 'இ' உலர் உணவு அட்டைகள், அப்பகுதி ப. நோ. கூ. சங்கங்களால் மீள்பரிசீலனைக்காக கையேற்கப்பட்டு வருகின்றன

(த-17)

# ஆறுபேர் தெரிவு

மந்திகை, டிசம்பர், 30

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் வீடமைப்பு நிவாரணம் பெறுவதற்கு ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் பருத்தித்துறை நகர சபையும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் கிளையும் இணைந்து நிவாரணம் பெறுவோரைத் தெரிவு செய்துள்ளன

(த-ரி)

# வல்லை வெளியில் மர நடுகை

வல்வெட்டித்துறை, டிச. 30

சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வல்லை வெளியில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை, சவுக்கு, புளி போன்ற மரக்கன்றுகள் நாட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை—யாழ். பாண் பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கென ஐந்து ஏக்கர் நிலம் வல்லை வெளியின் கிழக்குப் பக்கத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

அங்கு மூவாயிரத்துக்கும் அதிகமான மரமுந்திரிகை, சவுக்கு, புளி போன்ற மரங்கள் நாட்டப்பட்டு அதன் பராமரிப்பிற்கென சில ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-155)

# மயானம் புனரமைப்பு

மந்திகை, டிச. 30

புலோலி தெற்கு கருகம்பன் பொதுமயானம் பருத்தித்துறை பிரதேச சபையால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

மயானத்தில் காணப்பட்ட பற்றைகள், செடிகள் வெட்டப்பட்டு துப்புரவாக்கப்பட்டதுடன், குழாய்க் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இறைச்சிக் கடை வியாபாரிகளுக்கென கொல்களம் ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டு வருகிறது.

(த-ரி)

# கைதிகளின் நிலையில் உள்ள திருமலை திரும்பிய அகதிகள்

## ஐ. நா. அதிகாரி தகவல்

கொழும்பு டிச. 30

சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைப்பதற்கான திட்டத்தின் கீழ் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பல முகாம்களில் சிறைக் கைதிகள்போல் பிடித்து வைக்கப்பட்டிருப்பதாக திருகோணமலையில் இருந்துவரும் தகவல்கள் கூறுகின்றன,

பெரும் எண்ணிக்கையிலான இந்தஅகதிகளை மீளக்குடியமர்த்த இலங்கை அரசுக்கு இயலாமற்போனதே அகதிகளின் தற்போதைய நிலைமைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

அகதிகள் நிலைமை பற்றிப் பேசிய அகதிகளுக்கான ஐ. நா. தூதரக ஆலோசகர் திரு. ரொட்ரிச் ஸ்லிப்ஸ் அகதிகள் மிகவும் துன்பப்படுவதாகக் கூறினார். (த-எ)


# தேவை

## கணணி (COMPUTER)

## I.B.M. Compatible P. C.

மேற்படி கம்பியூட்டர் விற்பனைக்கு வைத்திருப்போர், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 473,

மே பா. உதயன்.

(சி/4061)



# ஸ்ரீ அருள்மிகு பொற்பதி விநாயகர் ஆலயம்

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

30 12 - 1992 புதன்கிழமை

கஜமுகாசூரசம்காரம்

பகல் 2-30 மணிக்கு அபிஷேகம்

3-30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை

தொடர்ந்து கஜமுகாசூரசம்காரம் நடைபெற்று, பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று பிள்ளையார் கதை பூர்த்தி.

அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு, விநாயகப் பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்:

ஆலய நிர்வாகஸ்தர்,

ந. தியாகராஜக் குருக்கள்.

(சி-4063)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இசைகள் நிறைந்த தரத்தில் உயர்ந்த Casio MT 520 ஓகன் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். யூட் போட்டோ, 51, நான்காம் குறுக்கு வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம். (சி/.057)

## துர்க்கா திருமண சேவை

31-08-1992 தொடக்கம் துர்க்கா திருமணசேவை சிவ சக்தி ஸ்ரோர்ஸ், இல 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலரும் மேற்கூறிய முகவரிக்கு புதன்கிழமைகளில் நேரடியாகவும் ஏனைய நாட்களில் கடிதம மூலமும் தொடர்பு கொள்ளவும். (5671)

## மலிவு விற்பனை

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள: ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி). மலிவு விலையில் கலண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீகாந்தா புத்தகசாலை. 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் (23673)

## இலவச திருமண சேவை

40வயது, (இந்து) ரோகிணி, கௌரவ குடும்ப, படித்த மணப்பெண்ணுக்கு மணமகன் அரச, தனியார் துறையில் தேவை மணமக்கள் சேவை ஞாயிறு காலையில் உண்டு. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23823)

27 வயது, திருவோணம, செவ்வாய் 8, B.Sc. Electronic Engineer U. K.க்கு ஏற்ற மணப்பெண் தேவை திருமணம் இலங்கையில் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா. யாழ். நாச்சிமார் கோவலடி. (23821)

32 வயது, ஆயிலியம், I. C. M. A. Accountant ஆக கொழும்பில் வேலை செய்பவருக்கு ஏற்ற மணாளன் தேவை. வெளிநாட்டில் உள்ளவரும் விரும்பத்தக்கது தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23822)

## SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature, ஆங்கிலத்தில் பேசப் பழக்கப் படுகிறது. கிழமையில் 2 நாட்கள், V. N Kandasamy, A. I. B. Part I, (London), Inter (London), 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (56.3)

## கடும் நடவடிக்கை

கொழும்பு டிச. 30

கொழும்பு நகரில் கண்டபடி ஓ.. பெருக்கி பாவித்து அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தீர்மானித்து உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

---

## அங்லோ ஏசியன் பேர்டிலைசேர்ஸ் கம்பனி வழங்கும் ...

## 'நியூட்றா பொஸ் சுப்பர் கே'
## NUTRA PHOS SUPER K

1) நெற்பயிர்களில், விளைவை 30 வீதம் வரை அதிகரிக்க குடலைபருவத்திலும், பூக்கும் பருவத்திலும், பால் பருவம் ஆரம்பிக்கும்போதும் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

2) கத்தரி, கோவா, உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களில் விளைவை பன்மடங்கு அதிகரிக்க, பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 14 நாட்கள் இடைவெளியில் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

பீடை நாசினிகள் விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/2867)

---

எல்லா விபரங்களும் அடங்கிய

## ஆனந்தா பஞ்சாங்க கலண்டர் - 1993

மலிவு விலை ரூபா 30/- மட்டுமே.

(சி-2854)

---

## எங்கிருந்தாலும் மறக்க முடியுமா?

எமது கல்லூரியில் ஆசிரிய பதவி ஏற்று, அரிய சேவையாற்றிய பின் யா/இந்துக் கல்லூரி அதிபராக இருந்து இளைப்பாறி ஈழநாடு செய்தித் தாளின் உயர் இலட்சியம் கொண்ட ஆசிரியராகவும், கல்விமானாகவும், எழுத்தாளராகவும், சிறந்த சமூக சேவையாற்றிய தொண்டனாகவும், ஆங்கில மொழியை ஆழமாகக் கற்ற அறிஞனாகவும் விளங்கிய

### அமரர் என். சபாரத்தினம்

அவர்களுக்கும்

எமது கல்லூரியின் பழைய மாணவனும் சிறந்த உதைபந்தாட்ட வீரனாக விளங்கி, நூலகராகவும், பயிற்சியாளராகவும் பணியாற்றி, அதே சேவையைப் பின்னர் தெல்லிப்பளை மாகாஜனக் கல்லூரிக்கு அர்ப்பணித்து இறுதியாக யா/பல்கலைக்கழகத்தில் சிறந்த பல உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்கிப் பல விருதுகளையும் பெற்று. தான் சேவையாற்றிய கல்வி நிறுவனங்களுக்கும், தனக்கும் பெரும் புகழ் ஈட்டி எதிர்பாராத விதமாக விளையாட்டுக் கழகங்களும் வீரர்களும் கலங்க எம்மை விட்டுப் பிரிந்த

### அமரர் ரி. பி. பத்மநாதன்

அவர்களுக்கும்

எமது கல்லூரியில் கல்வி சுற்று, எழுதுவினைஞர் பதவி ஏற்று அரிய சேவைகள் ஆற்றிய உரும்பராய் இந்துக் கல்லூரியில் எழுதுவினைஞராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற

### அமரர் பொன் வாமதேவன்

அவர்களுக்கும்

எமது கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவனாக விளங்கி, அண்மையில் அகாலமரணமான

### அமரர் ஜோர்ஜ் சுரேஸ்குமார்

அவர்களுக்கும்

## எமது கண்ணீர் அஞ்சலி

அவர்களுடைய பிரிவாற்றாது கலங்கி நிற்கும் குடும்பத்தவர்கள் அமைதி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சேது விபுலானந்தன்,
செயலர்.

யாழ்/சுன்னாகம், பழையமாணவர் சங்கம்.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

(சி-2528)

---

## பளை மாணவரின் சீருடை; இங்கு எடுத்துவரப்படும்!

யாழ்ப்பாணம், டிச. 30


கிளிநொச்சி கல்வி மாவட்டத்துக்குட்பட்ட பளை பகுதி பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவிருக்கின்றன.

ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் பருத்தித்துறைக்கு வரும் 'குமண' கப்பலில் இந்தச் சீருடைகளும் — யாழ் மாவட்ட மாணவர்களுக்கான இரண்டாவது தொகுதி சீருடைகளும் அனுப்பப்படும் என்று கொள்கை திட்டமிடல் அமைச்சு யாழ் செயலகத்துக்கு அறிவித்துள்ளது. (த-3)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 26 — 12 — 1954



உதிர்வு: 30 — 11 — 1992

அமரர்

### தாமோதரம்பிள்ளை தர்மசேகரம்

(A. I. B., இலங்கை)

தாமோதரம் பிள்ளைதம் பதியர்செய் தவத்தால்
மானிடர் போற்றும் புத்தூர்ப் பதிதனில்
ஆயிரம் தொளாயிரம் ஐம்பதின் நான்கில்
சேயாக வந்தினிதே உதித்தாய் நண்பா
மாண்புற விளங்கும் மகாஜனாக் கல்லூரி
மாணவனாய் உயர்தரத் தேர்ச்சியும் பெற்றே
பதினைந்து ஆண்டுகள் வங்கிச் சேவையில்
பலரும் மெச்சிடப் பணிபல ஆற்றினாய்
கணக்குப் பார்ப்பதில் பிணக்குகள் இன்றியே
இணக்கம் கண்டாய் எழில்மிகு சீரோய்
இலங்கை வங்கியாளர் தேர்வினில் தோற்றியே
துலங்கவே வைத்தாய் உன்பே ரறிவினை
நமக்கு வாய்த்ததோர் நலன்புரிச் சங்கத்தின்
எமக்கோர் செயலனாய் சேவையும் புரிந்தாய்
வங்கி வேலையில் நமுறும் களைப்பும்
நீங்கவே நீவரின் சலகலப்பாய் அமையுமே
இளம் மனைவியும் முகம்காணா மழலையும்
தளம்பவே விட்டு நீ சென்றதும் தகுமோ
தர்மத்தின் தரிப்பிடம் காணாது தவிக்கின்றோம்
தாங்கொணாத் துயர்தனை எங்கனம் சகிப்போம்.

மக்கள் வங்கி ஊழியர்-
நலன்புரிச் சங்கம்.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
30-12-92.

(23830)

---

## எம் நெஞ்சில் நிறைந்தவர்..

### அமரர் தா. தர்மசேகரம்

(மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

கூடிடும் தோழர்முன்
குளிர் தென்றலானவன்
கொள்கையில், பண்பினில்
குன்றாக நின்றவன்.

அன்னாரின் பிரிவால் வாடும் தாய், மனைவி மகள், உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள், விடுதலை விரும்பிகள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மக்கள் வங்கி
யாழ். பிரதேச ஊழியர் நலன்புரிச் சங்கம்.

ம வ பி. கா.
யாழ்ப்பாணம்

(23832)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### எம்.எஸ் எவ்வின் துணிச்சல

யுத்தத்தின் காரணமாக இலங்கை உடனடி ஆபத்தில் சிக்கியுள்ளது.

யுத்தம், பஞ்சம், நோய், அல்லது இடம்பெயர்தல் ஆகியவற்றால் முழு மக்களுமே உடனடி ஆபத்தில் சிக்கியுள்ள உலகின் பத்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்

இவ்வாறு பிரெஞ்சு நாட்டுத் தொண்டர் நிறுவனமான எம். எஸ். எவ். (Medecins Sans Frontieres'') ஐக்கிய நாடுகள் சபைக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரி த்திருக்கிறது.

தமிழர்களின் எழுச்சியை உரிமைப் போராட்டத்தை—அடக்குவதற்காக அரசு நடத்தும் இராணுவ நடவடிக்கை இந்த ஆபத்தை இலங்கையில் ஏற்படுத்தி உள்ளது— என்றும் எம். எஸ். எவ். தனது அறிக்கையில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

எம். எஸ். எவ். ஒரு மருத்துவத் தொண்டர் நிறுவனமாகும். அது சர்வதேச ரீதியாக போர் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களைச் சாவிலிருந்து காப்பாற்றுவதற்கான மனிதநேய சேவையை பிரதானமாக ஆற்றி வருகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கிலும் எம். எஸ். எவ். நிறுவனத்தின் பிரதிநிதிகள் பணிபுரிந்து வருகிறார்கள். வடக்கில் மடுவிலும் மந்திகையிலும் வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். அதனால் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி அரசாங்கப் படைகள் தமிழ் பொது மக்களைக் கொல்வதை— உண்மையான தள நிலையை— நேரில் அறிந்தவர்கள் அவர்கள்.

ஆகையால் அவர்கள் உண்மை நிலையின் தளத்தில் நின்று தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க முயல்வதால் முழு மக்களும் யுத்த ஆபத்தில் சிக்கி உள்ளனர் என்று துணிச்சலுடன், ஆணித்தரமாகக் கூறியுள்ளனர்.

பிரெஞ்சு நாட்டுத் தொண்டர் நிறுவனத்தின் துணிச்சலையும், நடுவுநிலையையும் பாராட்டுகிறோம். இலங்கையில் நடப்பது வெறும் உள்நாட்டுக்கலவரம் அல்ல. ஓர் இன அரசாங்கம், மற்றோர் இன மக்களை இனப் படுகொலை செய்கின்றது. அநாகரிகமான முறையில் அவர்களை அடக்கி ஆள்கிறது— என்பதை இவ்வாறான அறிக்கைகள், தகவல்கள் உலகத்துக்கு எடுத்து சொல்ல வல்லவையாகும்.

மக்கள் பெரும் எண்ணிக்கையில் சாகும்போது —கொல்லப்படும் போது—அதனை உள்நாட்டுப் பிரச்சினை என்ற வட்டத்திற்குள் அடக்கிவிடக் கூடாது மனித நேயம் உள்ளவர்கள் அதனைப் பார்த்துக் கொண்டும் இருக்கக்கூடாது; இருக்கமாட்டார்கள். அதுவே உலக மனிதாபிமான வரன்முறை.

எனவே எம், எஸ். எவ்வைப் போல, வடக்கு-கிழக்கில் பணி புரியும் ஏனைய சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் இங்குள்ள உண்மையான காட்சியை உலகத்துக்குப் படம் பிடித்துக் காட்ட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். அதுவும் பாதிக்கப் பட்டவர்களுக்கு, வாழ்வதற்கு அவஸ்தைப்படுவோருக்குச் செய்யும் ஒரு வகை உதவியே.

# மார்கழி மாதத்து மாண்பும் மங்கையர்கள் நோன்பும்

— வாசுகி சிவராமலிங்கம் —

மாதங்களில் சிறந்தது மார்கழி. ஏமந்த ருதுவின் (பனிக்காலம்) முதல் மாதம் இது. இது முன் பனிக்காலம். துயிலெழச் சோம்பலுற்றுப் படுக்கையில் புரண்டு கொண்டிருப்போர்க்கு தாங்கமுடியாத குளிரையும். இறையருள் இரக்க வேண்டிய துயில் நீங்கி நீராட முனைவோர்க்கு தண்ணீரும் வெந்நீர் வேபான்று வெதுவெதுப்பாகவும், இதமாகவும் அமையும் நீர்நிலைகளைக் கொண்ட மாதம்.

கல்வியிலும், ஆற்றலிலும் சிறந்த சூரிய பகவான் தேவ குருவாகிய வியாழபகவானின் ஆட்சி வீடாம். ''தனு'' ராசியில் சஞ்சரிக்கின்ற மாதம் மார்கழி மாதங்களில் நான் மார்கழியாக இருக்கினம் என்று கண்ணன் கீதையில் அருச்சுனனுக்கு உணர்த்தியதிலிருந்து அதன் சிறப்பு விளங்கும். பூலோக கைலாயமாகிய சிதம்பரத்தில் திருவாதிரைத் திருவிழாவும், பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீரங்கத்தில் ஏகாதசி விழாவும் மார்கழியில் தான் நடைபெறுகின்றமை அதன் மகிமையை உணர்த்துகின்றன

#### திருஎம்பாவை திருப்பாவை

திருஎம்பாவையும், திருப்பாவையும் பாவை நோன்பை ஒட்டி எழுந்த பிரபந்தங்கள் முன்னையது இருபது பாடல்களையும், பின்னையது முப்பது பாடல்களையும் கொண்டது. திருஎம்பாவை பிறந்த இடம் சைவத் தலங்களுள் சோதிலிங்கத் தலமான திருவண்ணாமலை. திருப்பாவை பிறந்த இடம் வைணவத் தலமான ஸ்ரீவில்லிபுத்தூர் தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் தெய்வீகமணம் கமழும் இன்னிசைப் பூங்கொத்துக்கள் இவை இரண்டுமாகும்.

இவை மார்கழி நீராடலை மையமாகக் கொண்டவை. இறைவன் என்ற அருட்சுனையில் ஞான நீராடல் செய்து, மூழ்கி மூழ்கி அகத்தூய்மை பெற வேண்டும் என்னும் உட்பொருள் உடையவை; உணர்த்துபவை. மக்கள் வாழ்க்கையையும், பொதுநோக்கையும் தெய்வத் தன்மையுடையவையாகக் காட்டி நிற்பவை. விளையாட்டும் வேடிக்கையுமாய் பல அரிய சமய உண்மைகளை, உயர்ந்த தத்துவங்களை உணர்த்துபவை.

நாதனாகவும், நாயகனாகவும் சிவனையும் திருமாலையும் கருதி மணிவாசகரும், ஆண்டாளும் திருஎம்பாவை திருப்பாவை பாடல்களைப் பாடியுள்ளார்கள். இவை நாயக — நாயகி பாவத்தில் அமைந்துள்ள உத்தமான இன்னிசைப் பாடல்கள் கன்னிப் பெண்கள் நல்ல கணவரை அடைய விரும்புவது திரு எம்பாவையின் ஒன்பதாம், பத்தொன்பதாம் பாடல்களில் வெளிப்படையாக உள்ளது. திருப்பாவையில் கண்ணனைக் கணவனாகப் பெறவேண்டும் என்ற கோபியரின் விருப்பம் இருபத்திஒன்பதாம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது

#### பாவை நோன்பு

பாவை என்ற சொல்லுக்கு பதுமை, சித்திரம், பெண் நோன்பு எனப் பல பொருள்படும். தொல்காப்பியத்தில் பாவை வகையிலான பாடலுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது எனினும் பாவை நோன்பு என்ற சொற்றொடரும் வழக்கிலுள்ளது. மார்கழி மாதத்தில் கன்னிப்பெண்கள் நடத்தும் வழிபாட்டையே இது குறிப்பதாகும். நாட்டில் மழை பெய்யாது வளம் குறைந்து, பஞ்சம் ஏற்பட்டிருப்பின் வறுமையை நீக்கவே இந் நோன்பு நோற்கப்பட்டு வந்துள்ளது எனத் தெரிகின்றது.

மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள், தினந்தோறும் வைகறையில் துயிலெழுந்து கூடிச் சென்று நதிகளில் நீராடுவர், 'கார்த்தியாயினி' தேவியின் உருவத்தை மண்ணால் செய்து பிரதிஷ்டை செய்து வழிபடுவர். அவ்வேளை அவர்கள் தேவியைத் துதித்துப்பாடுவர். இங்ஙனம் பவையர், பாவையை உருவாக்கி அதைத் துதித்துப் பாடுவதால் பாவைப் பாட்டு என வழங்கலாயிற்று என்பர் சான்றோர். எம்பாவாய் என்ற சொற்றொடர் தேவியின் திருவருளை வேண்டிப் பாடப்பட்டது என்பதை உணர்த்தும். இத்தகைய நோன்பை ஒட்டி ஒழுந்தவை தான் பாவைப் பாடல் என்பதில் ஐயமில்லை

#### பாவைப்பாட்டின் உட்பொருள்

இப்பாவைப் பாடல்களில் துயில் எழுப்புவதும் பனி நீராடுவதும் குறிப்பிடப்பட்டிருக்கக் காணலாம். துயில் எழுதல், துயில் எழுப்புதல், நீராடல் என்பன பல இடங்களில் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன இந்த இரு பிரபந்தங்களிலும் முற்பகுதியில் துயில் எழுப்பும் கருத்துக்கள் அமைந்துள்ளன. இவற்றுள் 'நீராடல்' என்பது வெளிப்படையாகவே கூறப்பட்டுள்ளது. 'தெய்வம்' என்ற உயரிய குறிக்கோளை இவை இரண்டும் கருப்பொருளாகக் கொண்டுள்ளன.

#### கன்னியர் வேண்டுதல்கள்

நாட்டுவளத்தில் நங்கையர் நாட்டம் கொண்டிருந்த போதிலும், கண்ணுக்கும் கருத்திற்கும் உகந்த கண்ணியமான கணவனைப் பெற வேண்டுமென்பதே அவர்களின் கண்டிப்பான விண்ணப்பமாக இருந்தது. இதன் மூலம் இம்மை இன்பத்துடன் மறுமை நலமும் எய்தலாம் என்று எண்ணினர்.

கண்ணைத் துயின்று அவமே காலத்தைக் கழிக்காமல் விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளை கண்ணுக்கினியானையும் அவனுடன் கலந்துறையும் கன்னியையும் பாடிக் களி கொள்வோ

★

# பெரும் எண்ணிக்கையான பயணிகள் திங்கள் பயணம்

## மீண்டும் இன்று படகுச் சேவை

நேற்று முன்தினம் கிளாலிப் படகுச் சேவை நடைபெற்றதால் இரு கரைகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் பயணம் செய்தனர்.

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்ததால் கிளாலிக் கரையில் மட்டும் சுமார் 2,000 பேர் கூடியிருந்தனர்.

எனினும் திங்கட் கிழமை குறிப்பிட்ட அளவு (42) படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபட்டதால் பலரது பயணம் தடைப்பட்டது. அவர்கள் வீடு திரும்பினர்.

ஆலங்கேணியில் இருந்தும் சுமாரான எண்ணிக்கையுள்ள பயணிகள் இக்கரை வந்து சேர்ந்தனர். பெரும் எண்ணிக்கையான எண்ணெய் பீப்பாய்களும், மரக்கறிமற்றும் வெற்றிலை என்பனவும் இக்கரைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டன

நேற்று செவ்வாய்க்கிழமை படகுச் சேவை நடைபெறவில்லை. அதனால் யாழ். கிளாலி பஸ் சேவையும் நடைபெறவில்லை. எனினும் இன்று புதன்கிழமை படகுச் சேவை நடைபெற உள்ளதால் பஸ் சேவையும் இடம்பெறும்.

இதேவேளை—

திங்களன்று அல்லிப்பளையிலிருந்து ஆரம்பமாகவிருந்த படகுச் சேவைகள் திட்டமிட்டவாறு அங்கிருந்து நடைபெறவில்லை. படகுகள் கரைக்கு வரக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டுவரும் பாதை வேலைகள் பூர்த்தியடையாததால் ஜனவரி இரண்டாம் திகதியிலிருந்தே அங்கிருந்து படகுச் சேவை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(அ-117-162)

### ஜனாதிபதித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி,

''அடுத்த இரண்டு வருட காலத்தினுள் எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளைத் தீர்க்க சந்தர்ப்பம் அளிக்கின்றேன்.

''1994 டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் போது பலமான பொதுவேட்பாளர் ஒருவரை எனக்கு எதிராக நிறுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த முடியும்.

''இந்த இரண்டுஆண்டு காலத்தினுள் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் உடல் தேறி, ஜனாதிபதித்தேர்தலில் நல்ல போட்டியைக் கொடுக்க முடியும்.

''இப்போது தேர்தல் நடத்தப்பட்டால் நான் 60 முதல் 70 சதவீதமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவேன் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

''ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள் நிறுவப்படும் வேகத்தை வைத்து, சிலர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் என்று கூறி வருகின்றனர். இது பிழையான அனுமானமாகும்!! — இப்படி பிரேமதாஸா மேலும் தெரிவித்தார். (உ-எ)

# மலேரியா நோய் பீடித்த அகதி முகாம் பெண் மரணம்

## மற்றும் நால்வர் மயக்க நிலையில்

தென்மராட்சி, டிச 30

அகதி முகாம் ஒன்றில் மலேரியாவால் பீடிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட பெண்மணி ஒருவர் பலியானார். மற்றும் மூன்று குழந்தைகள் உட்பட நால்வர் வாந்தியுடன் மயக்க நிலை அடைந்தனர்.

இச்சம்பவம், மீசாலை, அல்லாரை தெற்கு அகதி முகாமில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

மயக்க நிலையடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். அருமைத்துரை நேசகுமார் (8 வயது), தர்மலிங்கம் திவ்ா (2 வயது) ஆகிய இருவரும் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அடுத்த இருவரும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மலேரியா எதிர்ப்புக் குளிசைகளை உட்கொண்ட பின்னரே பெண்மணி இறந்ததாகவும், மற்றும் நால்வரும் மயக்க நிலை அடைந்ததாகவும் கூறப்பட்டது முகாமுக்கு வந்த வைத்தியக் குழுவினரே மலேரியா எதிர்ப்புக் குளிசைகளை வழங்கியதாகவும் மேலும் அறியவந்தது.

(அ-117)

### இந்து சமயப் பேரவை அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 30

அயோத்தி பாபரி மசூதி விவகாரம் சம்பந்தமாக, யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை வெளியிட்ட அறிக்கையில் —

அயோத்தி பாபரி மசூதி தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவிலும், மற்றும் இலங்கை தவிர்ந்த இந்தியாவின் அயல் நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் இந்துக்களுக்கும், இந்துக் கோவில்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்செயல்கள் குறித்து இந்துப் பேரவை கவலையும் கண்டனமும் தெரிவிக்க விரும்புகிறது — என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய உதயனில் வெளியான செய்தியின் முதலாவது பந்தியை மேற்கண்டவாறு திருத்தி வாசித்துக் கொள்ளவும். அ)

### பரவலாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவிருந்தது.

இதனையடுத்து மாதகல் பகுதியிலிருந்து சுழிபுரம், சாந்தை, பணிப்புலம் பகுதிகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். சுழிபுரம் வயல் பகுதியில் நான்கு ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இடையிடையே துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

இந்தக் களேபரத்தால் அப்பகுதியில் காலை 6 30 மணி வரை பதற்றம் நிலவியது.

(உ-13-17-28-117-143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி றோஸ் பியாற்றிஸ் மனுவேல்பிள்ளை

யாழ்ப்பாணம் இல 75, பிரதான வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி றோஸ் பியாற்றிஸ் மனுவேல்பிள்ளை நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. ஜேம்ஸ் மனுவேல்பிள்ளையின் அன்பு மனைவியும், பெபோ, நேசம், காலஞ்சென்ற திருமதி மார்செலா கிறிஸ்ரோபர், பொபி, டெய்சி, ஐடா, அன்ரன், ஜெறாட் ஆகியோரின் அன்புத் தாயாரும் A. T. பஸ்ரியாம்பிள்ளை, காலஞ்சென்ற C. F. J. பஸ்ரியன், J. கிறிஸ்ரோபர், காலஞ்சென்ற திரு. A. R. S. ராஜரட்ணம், M. J. J. புவிராஜசிங்கி, காலஞ்சென்ற திரு: நோயல் எதிர்மனசிங்கி, திருமதி. யூலியானா மனுவேல்பிள்ளை, திருமதி திலகா மனுவேல்பிள்ளை, டெய்சி, பேபி ஆகியோருடைய அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 30-12-92 மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து யாழ். பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திரு. M. J. J. புவிராஜசிங்கி
(மருமகன்)

75, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(23838)

## மேரி மெக்டலின் (செல்லம்மா)

மன்னாரைப் பிறப்பிடமாகவும், 38, கோவில் வீதி ஒழுங்கையில் வசித்தவருமாகிய மேரி மெக்டலின் (செல்லம்மா) 29-12-1992 இல் காலமானார்,

அன்னார் திருஞானம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், அருந்ததி (கனடா), தமயந்தி (U K.). சந்திரமதி, தளையசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், இம்மானுவேல், யேசுதாசன் (கனடா), கலாநிதி S. பிரேமச்சந்திரன் (U. K.) அவர்களின் அன்பு மாமியாரும், சுமிதா, பிரசன்னா, விக்டர், இம்மானுவேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் இன்று 30-12-1992 மாலை 4-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின் நல்லுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. திருஞானம்,
(கணவர்)

38, கோவில் வீதி ஒழுங்கை,
சுண்டிக்குளி.

(23833)

## திருமதி சி. புவனசுந்தரி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சி. புவனசுந்தரி 29-12-92 அன்று காலமாகிவிட்டார்.

இவர் கலாதேவி, மாலாதேவி, சுஜாதாதேவி, தேவசுந்தரி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற ரஞ்சிட் கணேசகுமார் (கலால் பரிசோதகர்) இன் மாமியாரும்,சோபனாவின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29 - 12 - 92 அன்று இருபாலை 'தங்கஸ்தான்' இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
அன்புப் பிள்ளைகள்.

''தங்கஸ்தான்''
இருபாலை, கோப்பாய்.

(23831)

## துரையப்பா யோகேஸ்வரன் (ஜேர்மனி)

வடலியடைப்பு அரசடி வீதியைச் சேர்ந்த துரையப்பா யோகேஸ்வரன் ஜேர்மனியில் 27ஆம் திகதியன்று அகாலமரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் துரையப்பா, (வர்த்தகர்) அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சுகேந்திரன், இராஜேஸ்வரன், கலாதேவி, சற்குணநாதன் (கனடா), பாஸ்கரன் (கனடா), இறாஜினிதேவி ஆகியோரின் சகோதரரும், சாந்தி (சிமெந்து கூட்டுத்தாபனம்), நந்தகுமார் (இலங்கை வங்கி, கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், தினேஸ், கோபிநாத் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்;
து. சுகேந்திரன்

அரசடி வீதி,
வடலியடைப்பு.

(23836)

# இன்று

இணுவை சிவகாமி அருள்நெறி மன்றத்தின் ஏற்பாட்டில் இணுவிலில் இன்று மாலை 6 மணிக்கு 'திருவெம்பாவை' இலவச நூல் வெளியீடு இடம்பெறும். (உ)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தின் நத்தார் விழாவும் புதுவருட விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். செஞ்சிலுவைச் சங்க கிளைப் பிரிவுகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ ★ ★

பாஷையூர் பகுதியில் உள்ள மீனவர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கான = மீன்பிடி வலை பின்னும் — தொழில் திட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு பாஷையூர் இளைஞர் சங்க மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்.

மகளிர் சுய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தை மகளிர் அபிவிருத்தி நிலையம் அறிமுகப்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

★ ★ ★

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ''பென்ஹர்'' வீடியோத் திரைப்படம் இன்றும் நாளையும் பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது. (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம் மற்றும் வேலணைக் கோட்டங்களைச் சேர்ந்த கணிதபாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும். (உ-3)

★ ★ ★

தென்னிந்தியத் திருச்சபையும் அளவெட்டி தெற்கு முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் ஒளிவிழா இன்று மாலை 4 மணிக்கு ஜெபமண்டபத்தில் நடைபெறும். (உ-13)

## திருவெம்பாவை இன்று ஆரம்பம்

குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் இன்று காலை திருவெம்பாவைப் பூசை ஆரம்பமாகின்றது. அதிகாலையில் வீதிப் பஜனைகள் வழமை போல் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

திருவெம்பாவை ஒட்டி திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி ஓதுதல் திருவாசகம் முற்றோதல் ஆகியன ஆலயங்களில் நடைபெறும்.

இந்து மன்றங்கள், பஜனைச் சபைகள் பலவும் திருவெம்பாவை ஓட்டி திருவாசக மனனப் போட்டிகளை நடத்தவுள்ளன. (அ-28-30)

## முச்சக்கர வண்டிகள் வந்தன

யாழ். சமூக சேவைப் பகுதிக்கு 20 முச்சக்கர வண்டிகள் குமண கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஊனமடைந்தவர்களுக்கு வழங்குவதற்காக எடுத்துவரப்பட்ட முச்சக்கர வண்டிகளும், ஊன்று கோல்களும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நேற்று செயலகத்துக்கு கொண்டுவரப் பட்டன. (உ-10)

## மந்திகை அரசினர் வைத்தியசாலையின்

# பிரெஞ்சு குழுவில் பணியாற்ற ஆர்ஜென்ரீனா வைத்தியர்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேவையாற்றி வரும் பிரான்ஸ் நாட்டு வைத்தியக் குழுவில் பணிபுரிய ஆர்ஜென்ரீனாவில் இருந்து சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் கடந்த வாரம் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவில் கடமையாற்றி வந்த தென் அமெரிக்காவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் மேற்படி குழுவின் தலைமையகத்துக்குத் திரும்பிச் சென்றுள்ளதை அடுத்தே ஆர்ஜென்ரீனாவிலிருந்து புதிய டாக்டர் இங்கு வரவழைக்கப்பட்டுள்ளார். (த-ரி)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று (29 - 12 - 92) இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி வேலுப்பிள்ளையின் அன்புக் கணவரும், ஆறுமுகத்தின் (முன்னாள் K. T. S லொறி உரிமையாளர்) அன்புத் தந்தையும், மீனாட்சியின் அருமை மாமனாரும், டாக்டர் கேதீஸ்வரன் (ஆதார வைத்தியசாலை, வவுனியா), பாஸ்கரி, சுப்பிரமணியம் (முகாமைத்துவத்துறை, இரண்டாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), கந்தசாமி (யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்), வசந்தா (ஆசிரியை), தவமணி இரத்தினசிங்கம், ஈஸ்வரி - சற்குருநாதன், ஆகியோரின் அன்புப் பேரனும், உமாசசிரேகா, உமாகரன், வினோஜா, ஜனனி, ஜசீதன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (30 - 12 - 92) காலை 9.00 மணிக்கு கரவெட்டி சோனப்பு மயானத்தில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. ஆறுமுகம்
(மகன்)

''மணி வசா''
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(23835)

## திரு. தில்லையம்பலம் சுப்பையா (வண்ணாம்புலம், வேலணை மேற்கு)

வேலணை மேற்கை (வண்ணாம்புலம்) பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது சுண்டிக்குளியில் வசித்தவருமாகிய தில்லையம்பலம் சுப்பையா 29-12-92 இல் காலமானார்.

இவர் கமலம்மாவின் அன்புக் கணவரும், இந்திரா, சந்திரா, மகேந்திரா, விக்னேஸ்வரன், சிவராசா, (ஜேர்மனி), அருள்சோதி (ஜேர்மனி), வசந்தா (ஜேர்மனி, சாந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற செல்வநாயகம், நடேசபிள்ளை (மட்டுவில்), சாந்தலிங்கம் (பிரான்ஸ்), சுசிலாதேவி,அனுஷா (ஜேர்மனி), சுபாஷினி (ஜேர்மனி), சுந்தரமூர்த்தி (ஜேர்மனி), கனகரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (30-12-92) 2 மணிக்கு தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பே. நடேசபிள்ளை
(மருமகன்)

14/2 பிளச்சஸ் வீதி,
(சுண்டிக்குளி மகளிர் பாடசாலை அருகாமையில்)
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(23839)

## செல்வலிங்கம் சர்மிலன்

32, ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த செ.சர்மிலன் (8ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) 29-12-92 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் செல்வலிங்கம் — திலகவதியின் அன்பு மகனும், பிரசன்னாரூபன், கமலரூபன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30-12-92) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. சுந்தரலிங்கம்
(கிராம சேவையாளர்)

32, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
(23840)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org